# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,
# நகர அபிவிருத்தி அதிகாரசபை
# (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1984, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1984, நவம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1984, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஒ. 51/84

**தேசிய அரசுப் பேரவையின் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குறித்த சில செயல்களை செல்லுபடியாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; தேசிய அரசுப் பேரவையின் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கும் ; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1\. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

## பாகம் I

2\. தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டம் சான்றுபடுத்தப்பட்ட தேதியன்று உள்ளவாறு சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1978 செத்தெம்பர் 06 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தைத் திருத்துகின்ற ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டத்தில் வெளிப்படையான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லையாயின் அத்தகைய சட்டம் சான்றுப்படுத்தப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய சட்டத்தில் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின், அதனகத்தே குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க— **முன்னர் புரியப்பட்ட செயல்களைச் செல்லுபடியாக்குதல்.**

(அ) அத்தகைய ஏதேனும் சட்ட ஏற்பாட்டைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாக உத்தேசித்து புரியப்பட்ட அல்லது புரியாது விடப்பட்ட செயல் ஒவ்வொன்றும், அத்துடன் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் திருத்தங்களும் இதனகத்து முன்னர் குறித்துரைக்கப்பட்ட தேதிகளிலிருந்து நடைமுறையிலிருந்தன என்றுற்போன்று செல்லுபடியானதாகவும் பயனுடையதாகவும் இருந்திருப்பனவாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று முடிவுறுதிருக்கின்ற அல்லது முற்றுப்பெறுத எல்லா வழக்குகளும், நடவடிக்கைகளும் அல்லது காரியங்களும் இச்சட்டத்தால் திருத்தப்பட்ட

வாறுன சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தினதும் திருத்தும் சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கிணங்க கேட்டுத் தீர்மானிக்கப்படுதலும் அல்லது கொண்டு நடாத்தப்பட்டு முற்றுப்பெறுதலும் வேண்டும் :

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னரான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக தவறொன்றிற்காக எவரேனும் ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கான அல்லது அவரைத் தண்டிப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் இப்பிரிவின் ஏற்பாடுகள் காரணமாக அத்தகைய ஆளுக்கெதிராக தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது.

இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னரான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில், இச்சட்டத்தினாலும் திருத்தும் சட்டங்களினாலும் திருத்தப்பட்டவாறுன, சொல்லப்பட்ட தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 28அ (3) என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, எவையேனும் நடவடிக்கைகள் தொடுக்கப்படலாம் அல்லது அவை முடிவுறுதிருப்பின் தொடர்ந்து நடாத்தப்படலாம் என, சந்தேகங்களைத் தவிர்த்தற்பொருட்டு இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதுடன், அதற்கிணங்க, சொல்லப்பட்ட 28அ (3) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளையெதனையும் ஆக்குதல் எவரேனும் நீதிவானுக்கு சட்டமுறையானதாதலும் வேண்டும்.

*நட்டோத்தரவாதம்.*

3. தேசிய அரசுப் பேரவையின் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாக உத்தேசித்து 1978 செத்தெம்பர் 06 ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் எவரேனும் அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக குற்றவியல் அல்லது குடியியல் நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலோ அல்லது நடாத்தப்படுதலோ ஆகாது.

## பாகம் II

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :—

'(1அ) அதிகாரசபைக்கு தவிசாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் ; இவர் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(1ஆ) தேசிய அரசுப் பேரவையின் இச்சட்டத்தில் அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பில் அப்போதைக்கு வலுவிலிருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தில் " சபைத் தவி

சாளர்" என்னும் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கங்கெல்லாம் அதற்குப் பதிலாக "அதிகாரசபைத் தவிசாளர்" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.'; அத்துடன்

(2) அதற்கான ஓரக்குறிப்பை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :—

"நகர அபிவிருத்தி அதிகார
சபையைத் தாபித்தலும்
தவிசாளரை நியமித்தலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

'(அ) இரண்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்படுபவரான (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர்;'; அத்துடன்

(2) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(உ) அப்போதைக்கு அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவிவகிக்கின்ற ஆள்; இவர் சபையின் செயலாளராக இருத்தல் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஓ என்னும் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஓ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாட்டை மீறி ஏதேனும் கட்டடத்தை இருப்பாட்சி கொள்ளுகின்ற அல்லது இருப்பாட்சிகொள்ள அனுமதிக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கும், அத்துடன் அத்தவறு தொடர்ந்துறப்படும் தவறொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய மீறுகை தொடர்ந்திருக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவைக் கொண்ட மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அதன் (1) ஆம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளில் "பொது முகாமையாளர்" என்னுஞ் சொற்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) (அ) ஆளெவரும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எழுத்திலான ஏதேனும் அறிவித்தலில் அடங்கியுள்ள ஏதேனும் தேவைப்பாட்டிற்கு அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அல்லது அதிகாரசபையால் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்திற்குள் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து, அதிகாரசபையானது—

(அ) ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்துவதற்கு ;

(ஆ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு ;

(இ) விடயத்திற்கேற்ப, அத்தகைய அறிவித்தலினால் அத்தகைய ஆள் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் புரிவதற்கு,

அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கும் கட்டளையொன்றை ஆக்குமாறு மனு மூலமும் சத்தியக்கடதாசி மூலமும் நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், நீதிவான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ள ஆளுக்கு அறிவித்தலைச் சேர்ப்பித்த பின்னர் அதுபற்றி அவர் திருப்திப்பட்டால் அதற்கிணங்கக் கட்டளையை ஆக்கலாம்.

(ஆ) அத்தகைய ஆள் காணியின் அல்லது கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்த, அல்லது கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிக்க அல்லது மாற்ற அல்லது 28அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்டவாறான அத்தகைய வேறு செயல்களைப் புரியப்பொறுப்பேற்றால், நீதிவானவர், அவர் தகுந்ததெனக் கருதினால், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகும் வாய்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு அளிக்கும் நோக்கத்துக்குப் போதுமானதென அவர் கருதக்கூடியவாறு இரண்டு மாதங்களை விஞ்சாத அத்தகைய காலத்திற்குக் கட்டளை நடைமுறைக்கு வருதலைப் பின்போடலாம்.".

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், அத்தகைய ஆள் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறியமை காரணமாக அவரால் உறப்பட்ட ஏதேனும் பொறுப்பைப் பாதித்தல் ஆகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28இ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 28ஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 28ஈ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"கட்டளையொன்றிற்கான விண்ணப்பம் கொடுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குள் தீர்த்து முடிக்கப்பட வேண்டும்.

28ஈ. இருபத்தெட்டு அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அத்தகைய விண்ணப்பத் தேதியிலிருந்து அறுபது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் இறுதியாகத் தீர்த்துமுடிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிவான், ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி—

(அ) ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்துவதற்கு ; அல்லது

(ஆ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு ; அல்லது

(இ) 28அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய வேறு செயல்களைப் புரிவதற்கு,

அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கும் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, நீதிவான், அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதலைப் பயனுறுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கட்டளைகளையும் ஆக்குதலும் வேண்டும்.".

10. ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளும் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் 1978, செத்தெம்பர் 06 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும். குறித்தசில திருத்தங்களின் கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.